பணிப்புரை இல. 51.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படும், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, எல்லா உற்பத்தியாளர்கள் இறக்குமதியாளர்கள் விநியோகத்தர்கள், வழங்குநர்கள் மற்றும் வியாபாரிகள் ஏதாவது காலாவதியான பொருட்கள்/மனிதப்பாவனைக்கு உகந்ததல்லாத பொருட்கள்/விற்பனைக்கு உகந்த நிலையில் இல்லாத பொருட்களை களஞ்சியப்படுத்துகையில் பண்டகசாலையில் நிரல்படுத்தி அடுக்குகையில் பின்வரும் முறையை கடைப்பிடித்தல் அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பாவனைக்கு ஒவ்வாத பொருட்கள் அழித்தல்/திரும்ப ஏற்றுமதிக்காக ஏதேனும் இடத்தில் சேமித்து வைக்கையில் பொருட்களின் வகை, வர்த்தகப் பெயர், நிறை/கொள்ளளவு அல்லது எண்ணிக்கை ஏன்பன அடங்கிய பதிவு விபரங்கள் பேணுதல் வேண்டுமென இத்தால் பணிப்புரை விடுக்கின்றது.

இப்பணிப்புரை 2014, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2014, ஒகத்து 15.

8- 1029/2

---

பணிப்புரை இல. 52.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, எல்லா உற்பத்தியாளர்கள் இறக்குமதியாளர்கள் விநியோகத்தர்கள், வழங்குநர்கள் மற்றும் வியாபாரிகள் ஏதாவது காலாவதியான பொருட்கள்/மனிதப்பாவனைக்கு உகந்ததல்லாத பொருட்கள்/விற்பனைக்கு உகந்த நிலையில் இல்லாத பொருட்களை களஞ்சியப்படுத்துகையில் பண்டகசாலையில் நிரல்படுத்தி அடுக்குகையில் பின்வரும் முறையை கடைப்பிடித்தல் அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பாவனைக்கு ஒவ்வாத பொருட்களும், வியாபார நடவடிக்கைகளின் போது விற்பனைக்காக காட்சிப்படுத்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக வைத்தல் அல்லது விற்பனைக்கு உட்படுத்தும் பொருட்கள் என்பவனவற்றில் இருந்து தனித்து வேறுபடுத்தப்படல் வேண்டுமென இத்தால் பணிப்புரை விடுக்கின்றது.

இப்பணிப்புரை 2014, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2014, ஒகத்து 15.

8- 1029/3

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.